



# உயர்கல்வித் துறை

## மானியக் கோரிக்கை எண் : 20

அறிவிப்புகள்
2022 – 2023

# உயர்கல்வித் துறை

**மானியக் கோரிக்கை எண் : 20**

## அறிவிப்புகள்
## 2022 - 2023

முனைவர் **க. பொன்முடி**
உயர்கல்வித் துறை அமைச்சர்

# உயர்கல்வித் துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உயர்கல்வித்துறை சார்பில் 27 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

முனைவர் **க. பொன்முடி**

உயர்கல்வித் துறை அமைச்சர்

**1. அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் மாணாக்கர்கள் / ஆராய்ச்சியாளர்களுக்கு விடுதி கட்டப்படும்**

**(Construction of New Hostel for Students / Research Scholars in Alagappa University Campus)**

அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் 4,800 மாணாக்கர்களும் 500 முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர்களும் பயின்று வருகின்றனர். ஏற்கனவே உள்ள விடுதிகளில் இடப்பற்றாக்குறை இருப்பதால், மாணாக்கர்களின் சிரமத்தை தவிர்க்கும் பொருட்டு ரூ.19.50 கோடி மதிப்பீட்டில் புதிய விடுதி கட்டப்படும்.

2. **பாரதியார் பல்கலைக்கழகத்தில் பயிலும் பெண் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் முதுகலை மாணவிகளுக்கு இரண்டு விடுதிகள் கட்டப்படும்**

**(Construction of two hostels for Women Research Scholars and PG students in Bharathiar University Campus)**

பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு வருடமும் மாணவியர்களின் சேர்க்கை அதிகரித்து வருவதால், கூடுதல் விடுதி வசதி தேவைப்படுகிறது. எனவே, பெண் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் முதுகலை பயிலும் மாணவியர்களுக்காக இரண்டு விடுதிகள் ரூ.22.22 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.



3. **அண்ணா பல்கலைக்கழக கிண்டி வளாகத்தில் மாணவியர்களுக்கான விடுதி கட்டப்படும்**

**(Construction of Hostel for women students in Anna University Guindy Campus)**

அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆண்டு தோறும் மாணவியர்களின் சேர்க்கை அதிகரித்து வருகிறது. எனவே, கிண்டி பொறியியல் கல்லூரி வளாகத்தில் மாணவியர்களின் நலன் கருதி 13,075 ச.மீ. பரப்பில் தரைத்தளம் மற்றும் மூன்று அடுக்குகளுடன் கூடிய நவீன விடுதி ரூ.49.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 4. சென்னை பல்கலைக்கழகத்தின் மெரினா வளாகத்தில் புதிய விடுதி கட்டப்படும் (Construction of New Hostel at Marina Campus, University of Madras)

சென்னை பல்கலைக்கழகம் தமிழகத்தில் பழமை வாய்ந்த மற்றும் முதன்மையான பல்கலைக்கழகமாக திகழ்வதால், மாணாக்கர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் சேர்க்கை அதிகரித்து வருகிறது. அவர்களின் தங்கும் வசதியை மேம்படுத்துவதற்காக, நவீன வசதிகளுடன் கூடிய புதிய விடுதி ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.



## 5. பாரதிதாசன் பல்கலைக்கழக காஜாமலை வளாகத்தில் மகளிர் விடுதி கட்டப்படும் (Construction of Women's Hostel at Khajamalai Campus of Bharathidasan University)

பாரதிதாசன் பல்கலைக்கழக, காஜாமலை வளாகத்தில் பயிலும் பெரும்பாலான மாணவியர் பிற மாவட்டங்களிலுள்ள கிராமங்களிலிருந்து வருவதால் அவர்களின் வசதிக்கென ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் மகளிர் விடுதி கட்டப்படும்.

## 6. அழகப்பா பல்கலைக்கழகத்தின் தொண்டி வளாகத்தில் கடல்சார் விளையாட்டு மையம் அமைக்கப்படும்

**(Establishment of Marine Sports and Tourism Centre at Thondi Campus of Alagappa University)**

அழகப்பா பல்கலைக்கழகத்தின் தொண்டி வளாகம் கடற்கரை அருகில் அமைந்துள்ளதால், மாணாக்கர்களிடையே கடல்சார் விளையாட்டுகளை ஊக்குவிக்கவும், அகில இந்திய அளவில், மாநில அளவில், மாவட்ட அளவில் கடல்சார் விளையாட்டுகளை நடத்தவும், கடல்சார் சுற்றுலாவை வளர்க்க உதவிடும் வகையிலும் அழகப்பா பல்கலைக்கழகத்தின் தொண்டி வளாகத்தில் கடல்சார் விளையாட்டு மையம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.



## 7. அண்ணா பல்கலைக்கழகத்தில் 11 மையங்கள் நிறுவப்படும்

**(Establishment of 11 Centres in Anna University)**

அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி முயற்சிகளை அதிகரிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் TIDCO, SIPCOT போன்ற நிறுவனங்களுடன் இணைந்து, 11 மையங்கள் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

- Centre for Artificial Intelligence, Data Science Research & Applications (CAInDRA)
- Centre for Robotics and Automation (CRA)
- Centre for Internet of Things (CIoT)
- Centre for Cyber Security (CCS)
- Centre for Wireless System Design (C-WiSD)
- Centre for Excellence in Automobile Technology (CEAT)
- Centre for E-Vehicle Technologies (CEVT)
- Bose-Einstein Science & Technology (BEST) Centre for Fundamental Research
- Centre for Liberal Arts for Science, Engineering & Technology - (CLASET)
- Centre for Multi-Disciplinary System Research (CMDSR)
- Centre for Energy Storage Technologies (CEST)

## 8. அண்ணா பல்கலைக்கழக மாணாக்கர்களின் தொழிற்திறன்களை மேம்படுத்த புதிய பாடப்பிரிவு அறிமுகப் படுத்தப்படும்

**(Introduction of Industry Skill based courses to the students of Anna University )**

மாணாக்கர்களின் தொழிற்திறன்களை மேம்படுத்துவதற்காக பி.இ./ பி.டெக். /எம்.சி.ஏ. படிக்கும் மாணாக்கர்களுக்கு IBM நிறுவனத்துடன் இணைந்து புதிய பாடப்பிரிவு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் ரூ.6.00 கோடி நிதியுதவியுடன் அண்ணா பல்கலைக் கழகத்தில் தொடங்கப்படும்.



## 9. தொழிற்சாலைகளில் பணிபுரியும் பட்டயப்படிப்பு (Diploma) படித்தவர்களுக்கு பணிபுரிந்து கொண்டே பொறியியல் பட்டம் பயிலுவதற்கான திட்டம்

**(Degree Programme in Engineering under Work Integrated Learning (WIL) mode for Industrial Personnel)**

தொழிற்சாலைகளில் வேலை உடன் இணைந்த கற்றல் முறைப்படி, பட்டயப்படிப்பு (Diploma) படித்த பணியாளர்களுக்கு பணி செய்து கொண்டே பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பட்டம் பெறுவதற்கான திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டம் பணியாளர்கள் தங்களுடைய கல்வித் தகுதிகளை உயர்த்துவதற்கு வழிவகுக்கும்.

## 10. அண்ணா பல்கலைக்கழக துறை கல்லூரிகளில் நேரடி இரண்டாம் ஆண்டு மாணாக்கர் சேர்க்கை

**(Lateral Entry admission in Anna University Department Colleges)**

பட்டயப்படிப்பு (Diploma) முடித்த மாணாக்கர்கள் நேரடியாக பொறியியல் பட்டப்படிப்பில் இரண்டாம் ஆண்டில் சேர்க்கை பெறுகிறார்கள். இந்த கல்வியாண்டு முதல், அண்ணா பல்கலைக்கழக CEG, Guindy, MIT, Chromepet மற்றும் ACTech, Guindy கல்லூரிகளிலும் பொறியியல் நேரடி இரண்டாமாண்டு மாணாக்கர் சேர்க்கை அறிமுகப்படுத்தப்படும்.



## 11. அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி பூங்கா நிறுவப்படும்

**(Establishment of Research Park at Anna University)**

முன்னாள் மாணாக்கர்கள் மற்றும் தொழிற்சாலைகளுடன் இணைந்து அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், ஆராய்ச்சி பூங்கா ரூ. 50.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

தொழில்நிறுவனங்கள் சார்ந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள், அடைகாப்பு மையங்கள் (Incubation Centres) இங்கு அமைக்கப்படும். இதன் மூலம், சுமார் 20,000 இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சி படிப்பு மாணாக்கர்கள் பயன்பெறுவர்.

**12. தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக் கழகத்தில் பயிலும் சிறைக்கைதிகள், திருநங்கைகள் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு கட்டண விலக்களிக்கப்படும்**

**(Exemption of fees for the Jail Inmates, Transgenders and Destitute Widows)**

சிறைக் கைதிகள், திருநங்கைகள் மற்றும் ஆதரவற்ற விதவைகளின் சேர்க்கை விகிதத்தை உயர்த்துவதற்காக, தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக் கழகத்தில் கட்டணமின்றி பயின்று பட்டம் பெறும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.



**13. பத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முனைவர் பட்ட ஆராய்ச்சி படிப்புகள் தொடங்கப்படும்**

**(Starting Ph.D Research Programmes in 10 Government Arts and Science Colleges)**

அரசு கல்லூரிகளில் முதுநிலை பயிலும் மாணாக்கர்கள் ஆராய்ச்சி படிப்பினை தொடர ஏதுவாக 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முனைவர் பட்ட ஆராய்ச்சி படிப்புகள் தொடங்கப்படும்.

## 14. 16 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கட்டடங்கள் கட்டப்படும் (Construction of Buildings for 16 Government Arts and Science Colleges)

2016-17 முதல் 2020-21 வரை தொடங்கப்பட்ட பின்வரும் 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கட்டடங்கள் கட்டப்படும்:-

1. குடவாசல், திருவாரூர். (2017-18)
2. காட்டுமன்னார்கோவில், கடலூர் மாவட்டம் (2017-18).
3. இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம் (2019-20).
4. ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் ( 2020-21).
5. ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம் (2020-21).
6. தரங்கம்பட்டி, கரூர் மாவட்டம் (2020-21).



2021-22-ஆம் ஆண்டில் தொடங்க அறிவிக்கப்பட்டுள்ள பின்வரும் 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கட்டடங்கள் கட்டப்படும்:-

1. திருச்சுழி, விருதுநகர் மாவட்டம்.
2. திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி மாவட்டம்.
3. தாளவாடி, ஈரோடு மாவட்டம்.
4. ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.
5. மானூர், திருநெல்வேலி மாவட்டம்.
6. தாராபுரம், திருப்பூர் மாவட்டம்.
7. ஏரியூர், தருமபுரி மாவட்டம்.
8. ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.
9. கூத்தாநல்லூர், திருவாரூர் மாவட்டம்.
10. சேர்க்காடு, வேலூர் மாவட்டம்.

மேற்காண் 16 கல்லூரிகளுக்கு ரூ.199.36 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டப்படும்.

**15. செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணாக்கர்களுக்காக முதுகலை வணிகவியல் பாடப்பிரிவு சென்னை, மாநிலக் கல்லூரியில் தொடங்கப்படும்**

**(Starting M.Com. course for Differently Abled students with Hearing Impairment in Presidency College, Chennai)**

சென்னை, மாநிலக் கல்லூரியில் இளங்கலை வணிகவியல் பாடப்பிரிவு செவித்திறன் குறைபாடுள்ள மாணவர்களுக்கு 2007 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. இப்பாடப்பிரிவில் பயிலும் மாணாக்கர்கள் முதுகலை படிப்பதற்கும், வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கும் முதுகலை வணிகவியல் பாடப்பிரிவு 2022-23 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்படும்.



**16. புதுக்கோட்டை, மாமன்னர் கல்லூரியில் புதிய நூலகக் கட்டடம் கட்டப்படும்**

**(Construction of New building for Library at H.H The Rajah's College, Pudukkottai with enhanced facilities)**

புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியின் பாரம்பரிய கட்டடத்தின் ஒரு பகுதியில் அதன் நூலகம் செயல்பட்டு வருகிறது. தற்போதைய நூலகம் மிகவும் பாழடைந்த நிலையில் உள்ளதால் நவீன வசதிகளுடன் கூடிய புதிய நூலகக் கட்டடம் ரூ. 6 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 17. பத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் (Opening of 10 Government Arts and Science Colleges)

கிராமப்புற மாணாக்கர்களுக்கு அரசு கல்லூரிகள் சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்தி தருகின்றன. அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகள் உயர்கல்வி பெறுவதை ஊக்குவிக்கும் வகையில் மாதந்தோறும் ரூ.1000/- வழங்கும் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. எனவே, அரசு கல்லூரிகளின் தேவை அதிகரித்துள்ளதால், கீழ்க்காணும் இடங்களில் ரூ.166.50 கோடி மதிப்பீட்டில் 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்படும் :-

1. மணப்பாறை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.



2. செஞ்சி, விழுப்புரம் மாவட்டம்.
3. தளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
4. திருமயம், புதுக்கோட்டை மாவட்டம்.
5. அந்தியூர், ஈரோடு மாவட்டம்.
6. அரவக்குறிச்சி, கரூர் மாவட்டம்.
7. திருக்காட்டுப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டம்.
8. ரெட்டியார்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.
9. வடலூர், கடலூர் மாவட்டம்.
10. ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

18. பரமக்குடி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை பெண்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக மாற்றப்படும்

(Conversion of Government Arts and Science College, Paramakudi into Government Arts and Science College for Women)

பரமக்குடியில் இரண்டு இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன. கிராமப்புற மாணவிகளின் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கும் வகையில், 2019-20-ஆம் ஆண்டில் அரசு கல்லூரியாக மாற்றப்பட்ட பல்கலைக்கழக உறுப்பு கல்லூரி, அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக மாற்றப்படும்.



19. அரசு கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்

(Creating Infrastructural Facilities in Government Colleges)

2022-23 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அரசு கல்லூரிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.1000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, ரூ.200 கோடி செலவினத்தில், 26 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 55 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் வகுப்பறைகள், ஆய்வகங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும்.

## 20. அரசு கல்லூரிகளில் ஆய்வகங்கள் மற்றும் நூலகங்கள் நவீனப்படுத்தப்படும் (Modernization of Laboratories and Libraries in Government Colleges)

அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் ஆய்வகங்களை நவீனப்படுத்துவதற்காக பல்வேறு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும். மேலும், மாணாக்கர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்காக அரசு கல்லூரிகளில் நூலக வசதி மேம்படுத்தப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.100.00 கோடி ஆகும்.



## 21. அரசு பொறியியல் கல்லூரிகளில் விளையாட்டு வசதிகள் மேம்படுத்தப்படும் (Enhancement of sports facilities in Government Engineering Colleges)

மாணாக்கர்களின் விளையாட்டு திறன் மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், அவர்கள் மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும், 10 அரசு பொறியியல் கல்லூரிகளில் உள்விளையாட்டு அரங்கத்துடன் கூடிய விளையாட்டு வசதிகள் சுமார் ரூ.80.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**22. அரசு பொறியியல் கல்லூரிகளில் அயல்நாட்டு மொழிகள் மையம் நிறுவப்படும்**

**(Establishment of Centre for Foreign Languages in Government Engineering Colleges)**

அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் அயல்நாட்டு மொழிகளை கற்பதற்கும், உயர்படிப்பிற்கான வாய்ப்பு மற்றும் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு ஆகியவற்றை பெறுவதற்கும் தன்னிறைவு மையமாக 11 அரசு பொறியியல் கல்லூரிகளில் அயல்நாட்டு மொழிகள் கற்பித்தல் மையம் ரூ.11.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.



**23. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படும்**

**(Introducing New Courses in Government Polytechnic Colleges)**

தொழில் நிறுவனங்களின் தேவைகளுக்கேற்ப மாணாக்கர்களின் திறனை மேம்படுத்திட அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆடை வடிவமைப்பு, வேளாண்மை பொறியியல், இயந்திர மின்னணுவியல், தளவாட தொழில்நுட்பம், மற்றும் ஆட்டோமொபைல் பொறியியல் (சான்ட்விச்) போன்ற புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படும்.

## 24. தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் திட்ட கண்காணிப்பு மையம் ஏற்படுத்தப்படும்

**(Establishment of Project Monitoring Unit at Directorate of Technical Education)**

அரசு பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை ஒருங்கிணைந்து நிர்வகிக்கும் பொருட்டு, திட்ட கண்காணிப்பு மையம் ரூ.14.20 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். இம்மையம், முதல் தலைமுறை பட்டதாரி கல்விக் கட்டணச் சலுகை, 7.5 சதவீதம் அரசு பள்ளி மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலான உள்ஒதுக்கீடு, post matric கல்விக் கட்டணச் சலுகை ஆகிய திட்டங்களை கண்காணிப்பதற்கும், மேற்பார்வையிடுவதற்கும் உதவிபுரியும்.



## 25. மதுரை அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் புரோடோசெம் புத்தாக்க பாடப்பிரிவு தொடங்கப்படும்

**(Introduction of ProtoSem course in Government Polytechnic College, Madurai)**

புத்தாக்க மற்றும் புதிய தொழில்நுட்பத் திறன்களை மாணாக்கர்களுக்கு வழங்குவதற்காக, ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் புரோடோசெம் (ProtoSem) என்ற 18 வார புத்தாக்க பாடப்பிரிவு, மதுரை, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில், முதற்கட்டமாக அறிமுகப்படுத்தப்படும். இப்பாடப் பிரிவானது, தொழில் நிறுவனத்தினரால் நடத்தப்படுவதால், மாணாக்கர்கள் சிறந்த வேலைவாய்ப்பை பெறக் கூடியவர்களாகவும் தொழில் முனைவோர்களாகவும் உருவாக்கப் படுவார்கள்.

## 26. உலக திறன் அகாடெமி மற்றும் நவீன தொழில்நுட்ப உற்பத்தி மையம் அமைக்கப்படும்

**(Establishment of World Skill Academy and Smart Manufacturing Technology Centres)**

தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், தொழில் நிறுவன பங்குதாரருடன் இணைந்து, உலக திறன் அகாடெமி மற்றும் நவீன தொழில்நுட்ப உற்பத்தி மையங்கள் (Smart Manufacturing Technology Centres) ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் 6 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் அமைக்கப்படும். இம்மையங்கள், World Skills in Electrical Installation, Industrial Controls and Drives, Supervisory Control and Data Acquisition– SCADA and Digital Manufacturing – Industrial 4.0 போன்ற பயிற்சிகளை வழங்கும்.



## 27. தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் மேம்படுத்தப்படும்

**(Development of Tamil Nadu Unmanned Aerial Vehicles Corporation)**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 25.01.2022 அன்று தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகத்தைத் தொடங்கி வைத்தார். ரூ.10.00 கோடி மதிப்பிலான ஆளில்லா விமானங்களை சொத்து மூலதனமாக (Share Capital) வைத்து இக்கழகம் தொடங்கப்பட்டது. இக்கழகத்தின் அன்றாட செயல்பாடுகள் மற்றும் அதனை விரிவுபடுத்துவதற்கு ரூ.5.00 கோடி அரசால் வழங்கப்படும்.

இக்கழகம், வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் வர்த்தகம் தவிர விவசாய பூச்சிக் கொல்லி தெளித்தல், கண்காணிப்பு, தேடல் மற்றும் மீட்பு, நிலஅளவீட்டு பகுப்பாய்வு, கனிமவளங்களை கண்டறிதல் போன்ற ட்ரோன் அடிப்படையிலான ஏராளமான சேவைகளை வழங்கும்.





# உயர்கல்வித் துறை

மானியக் கோரிக்கை எண் : 20

அறிவிப்பு எண்.19–ன் இணைப்பு

# உயர்கல்வித் துறை

மானியக் கோரிக்கை எண் : 20

அறிவிப்பு எண்.19–ன்
இணைப்பு

முனைவர் **க. பொன்முடி**
உயர்கல்வித் துறை அமைச்சர்

# அறிவிப்பு எண்.19

# உட்கட்டமைப்பு மேம்படுத்தப்படவுள்ள அரசு கல்லூரிகள்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்
(Government Arts & Science Colleges)

1) அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அரசு கலைக் கல்லூரி, திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம்.

2) புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

3) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெம்மேலி, செங்கல்பட்டு மாவட்டம்.

4) அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, வாலாஜாபேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம்.

5) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

6) அரசு திருமகள் ஆலைக் கல்லூரி, குடியாத்தம், வேலூர் மாவட்டம்.

7) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்.

8) அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

9) அரசு மகளிர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

10) அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

11) பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாலக்கோடு, தருமபுரி மாவட்டம்.

12) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம்.

13) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தென்னாங்கூர், திருவண்ணாமலை மாவட்டம்.



14) அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

15) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம் மாவட்டம்.

16) திரு. ஆ. கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரி, திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்.

17) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

18) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.

19) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திட்டமலை, ஈரோடு மாவட்டம்.

20) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காங்கேயம், திருப்பூர் மாவட்டம்.

21) அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, ஆத்தூர், சேலம் மாவட்டம்.

22) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, லால்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

23) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

24) அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேப்பூர், பெரம்பலூர் மாவட்டம்.

25) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேப்பந்தட்டை, பெரம்பலூர் மாவட்டம்.

26) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.

27) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கறம்பக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.

28) மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.

29) அரசு கலைக் கல்லூரி, கரூர், கரூர் மாவட்டம்.

30) அரசு கலைக் கல்லூரி, குளித்தலை, கரூர் மாவட்டம்.

31) திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரி, இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.

32) அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, நாமக்கல், நாமக்கல் மாவட்டம்.



33) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம்.

34) அரசு கலைக் கல்லூரி, சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

35) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திட்டக்குடி, கடலூர் மாவட்டம்.

36) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம்.

37) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டம்.

38) பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்.

39) அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.

40) எம்.வி.எம். முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்டம்.

41) அரசு மகளிர் கலைக் கல்லூரி, சிவகங்கை, சிவகங்கை மாவட்டம்.

42) அரசு மகளிர் கலைக் கல்லூரி, நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்.

43) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்.

44) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம்.

45) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

46) அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.

47) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கடையநல்லூர், தென்காசி மாவட்டம்.

48) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.

49) அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம்.

50) அரசு கலைக் கல்லூரி, பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.



51) சேதுபதி அரசு கலைக் கல்லூரி, இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

52) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முதுகுளத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்.

53) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை, இராமநாதபுரம் மாவட்டம்.

54) அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை மாவட்டம்.

55) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆர்.கே. நகர், சென்னை மாவட்டம்.

## அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள்
(Polytechnic Colleges)

1) அரசு தொழில்நுட்பப் பயிலகம்,
தரமணி, சென்னை மாவட்டம்.

2) வேதியியல் தொழில்நுட்பப் பயிலகம்,
தரமணி, சென்னை மாவட்டம்.

3) தோல் தொழில்நுட்பப் பயிலகம்,
தரமணி, சென்னை மாவட்டம்.

4) நெசவுத் தொழில்நுட்பப் பயிலகம்,
தரமணி, சென்னை மாவட்டம்.

5) மாநில வணிகக் கல்வி பயிலகம்,
தரமணி, சென்னை மாவட்டம்.

6) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
செவ்வாய்ப்பேட்டை, திருவள்ளூர் மாவட்டம்.

7) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

8) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
நாகப்பாடி, திருவண்ணாமலை மாவட்டம்.

9) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
ஜைகநூறள்ளி, தருமபுரி மாவட்டம்.

10) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
சங்கரன்பாளையம், வேலூர் மாவட்டம்.

11) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
எஸ்–கொல்லூர், விழுப்புரம் மாவட்டம்.



12) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

13) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.

14) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
வனவாசி, சேலம் மாவட்டம்.

15) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
சேதுராப்பட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

16) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
கீழகணவாய், பெரம்பலூர் மாவட்டம்.

17) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
மோகனூர், நாமக்கல் மாவட்டம்.

18) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
கொருக்கை, திருவாரூர் மாவட்டம்.

19) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
வலங்கைமான், திருவாரூர் மாவட்டம்.

20) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
அம்பலக் காரன்பட்டி, மேலூர், மதுரை மாவட்டம்.

21) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
கோட்டூர், தேனி மாவட்டம்.

22) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி,
தேக்கம்பட்டி, தேனி மாவட்டம்.

23) பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசு மகளிர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, எட்டையபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

24) அரசு மகளிர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

25) ஸ்ரீநிவாசா சுப்பராயா அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, புத்தூர், மயிலாடுதுறை மாவட்டம்.

26) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.